அதிகாரம் 20

# தேவனின் வாக்குத்தத்தத்தை பாதுகாத்தல்

20ஆம் அதிகாரத்தில் ஆபிரகாமும் சாராளும் அலைந்து தரிவதை மீண்டும் காணலாம். கேராரிலே நடைபெற்ற நிகழ்வுகள் 12ஆம் அதிகாரத்தில் எகிப்தில் நடந்ததற்கு ஒத்து இருக்கின்றது.

## ஆபிரகாமின் வஞ்சனையும் அபிமலேக்கின் குற்றமின்மையும் (20:1-7)

**1ஆபிரகாம் அவ்விடம் விட்டு, தென்தேசத்திற்குப்
பிரயாணம்பண்ணி, காதேசுக்கும் சூருக்கும் நடுவாகக் குடியேறி,
கேராரிலே தங்கினான், 2அங்கே ஆபிரகாம் தன் மனைவியாகிய
சாராளைத் தன் சகோதரி என்று சொன்னதினாலே, கேராரின்
ராஜாவாகிய அபிமெலேக்கு ஆள் அனுப்பிச் சாராளை அழைப்பித்தான்.
3தேவன் இரவிலே அபிமெலேக்குக்குச் சொப்பனத்திலே தோன்றி: நீ
அழைப்பித்த ஸ்திரீயின்நிமித்தம் நீ செத்தாய்; அவள் ஒருவனுடைய
மனைவியாயிருக்கிறாளே என்றார். 4அபிமெலேக்கு அவளைச்
சேராதிருந்தான். ஆகையால் அவன்: ஆண்டவரே, நீதியுள்ள
ஜனங்களை அழிப்பீரோ? 5இவள் தன் சகோதரி என்று அவன்
என்னோடே சொல்லவில்லையா? அவன் தன் சகோதரன் என்று
இவளும் சொன்னாளே; உத்தம இருதயத்தோடும் சுத்தமான
கைகளோடும் இதைச் செய்தேன் என்று சொன்னான். 6அப்பொழுது
தேவன்: உத்தம இருதயத்தோடே நீ இதைச் செய்தாய் என்று நான்
அறிந்திருக்கிறேன்; நீ எனக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு
உன்னைத் தடுத்தேன்; ஆகையால், நீ அவளைத் தொட நான் உனக்கு
இடங் கொடுக்கவில்லை. 7அந்த மனுஷனுடைய மனைவியை
அவனிடத்திற்கு அனுப்பிவிடு; அவன் ஒரு தீர்க்கதரிசி; நீ
பிழைக்கும்படிக்கு அவன் உனக்காக வேண்டுதல் செய்வான்; நீ
அவளை அனுப்பிவிடாதிருந்தால், நீயும் உன்னைச் சேர்ந்த யாவரும்
சாகவே சாவீர்கள் என்று அறிவாயாக என்று சொப்பனத்திலே
அவனுக்குச் சொன்னார்.**

**வசனம் 1.** இந்த அதிகாரம் ஆபிரகாமின் அடுத்த பயணத்தின் தொடக்க புள்ளியாக தொடங்குகிறது. **அங்கிருந்து** என்கிற சொற்றொடர், லோத்து ஒருகாலத்தில் வாழ்ந்த சுட்டெரிக்கப்பட்ட புகை நிறைந்த பள்ளத்தாக்கை நோக்கிப் பார்த்த இடமாக அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடும் (19:27, 28). எனினும், ஆபிரகாமுடைய பயணம் அவனுடைய முழு குடும்பத்தையும் உள்ளடங்கியதாக இருக்கக்கூடும் என்பதால், "அங்கிருந்து" என்கிற சொற்றொடர் பெரும்பாலும் "மம்ரேயின் கர்வாலி அருகில்" அவர் தன் கூடாரத்தை அமைத்த இடத்தை குறிக்கிறது (18:1).

தெற்கு கானானிலுள்ள நெகேவுக்கு முற்பிதா ஏன் சென்றார் என்று வேதம் விவரிக்கவில்லை. எனினும், அவர் **காதேசுக்கும் சூருக்கும் இடையில் குடியேறினார்** என்பதை கூறுகின்றது: பிந்தய இடம் மேற்கே எகிப்தை நோக்கி அமைந்துள்ளது. இது ஆகார் முன்பு தப்பியோடிவந்த அதே பொதுவான இடம் ஆகும் (16:7, 14 கருத்துக்களை காண்க). எவ்வளவு காலம் ஆபிரகாம் அங்கே தங்கினான் என்பது உறுதியற்றதாயுள்ளது, ஆனால் பின்னர் தன்னுடைய பரிவாரத்தை வடக்கு பக்கமாக நகர்த்தினான் (גּוּר, *gur*, குற்) மேலும் **கேராரில்** புற ஜாதியைப் போல் தங்கினான். கேராரின் இட அமைப்பு உறுதியற்றதாய் உள்ளது; ஆனாலும் பெரும்பாலான இடம் டெல் ஹேரோர், இது காசாவிற்கு தென் கிழக்கை நோக்கி ஒன்பது மைல் தூரத்திலும் பெயர்செபாவிற்கு வடமேற்கை நோக்கி பதினைந்து மைல் தூரத்திலும் அமைந்துள்ளது.[1]

**வசனம் 2. கேராருடைய இராஜாவாக அபிமெலேக்** குறிப்பிடப்பட்டுள்ளார், அதற்கு "என்னுடைய அப்பா இராஜா" என்பது இலக்கியரீதியான அர்த்தம். "அபிமெலேக்" என்பது ஒரு தனிப்பட்ட பெயராக இல்லாமல், எகிப்திலுள்ள "பார்வோன்" அல்லது பிந்தய ரோமாபுரிலுள்ள "சீசர்" போன்ற ஒரு இராஜரீகமானத் தலைப்பாய்த் தோன்றுகிறது.[2] ஆதியாகமம் 26:1 ஒருபிந்தய கொராரின் இராஜாவைக் குறித்துசொல்லுகிறது அவனும் "அபிமெலேக்" என்று அழைக்கப்பட்டான்.

இங்கே, இரண்டாவது முறையாக, **ஆபிரகாம் தன் மனைவியாகிய சாராளைக்** குறித்து, அவள் என் **சகோதரி** என்று பொய் சொல்கிறான் (12:19 காண்க). முந்தய சம்பவத்திற்க்கு மாறாக (12:11 காண்க), இந்த சமயத்தில் முற்பிதா அவளுடைய அழகை பாராட்டவில்லை. சுமார் இருபத்தைந்து ஆண்டுகள் ஆகியிருந்தன, மேலும் சாராள் இப்போது தொண்ணூறு வயதாயிருந்தால். இந்த விவரங்களை எவ்வாறு புரிந்துக்கொள்ள வேண்டும்?

முந்தைய காலத்தில் ஆயுட்காலம் மிகவும் நீண்டிருந்தபடியால், சாராள் நடுத்தர வயதாகத் தோன்றியதும் மற்றும், இன்னும் அழகாக இருந்ததும் சாத்தியம். அவளுடைய தொடர் அழகு 20:11ல் ஆபிரகாமின்

கருத்திலிருந்து மேற்கொள்ளப்படலாம்: “இவ்விடத் தில் தெய்வ பயம் இல்லை என்றும், என் மனைவியினிமித்தம் என்னைக் கொன்றுபோடுவார்கள் என்றும் நான் நினைத்தேன்.” எகிப்திய இணை சம்பவத்தில், இதே பயம் சாராளுடைய அழகுக்கு நேரடியாக இணைக்கப்படுகிறது (12:11, 12). கேராரில் நடந்த கதையின் அனைத்து விவரங்களை சேர்ப்பதற்கான தேவையை எழுத்தாளர் பார்க்காமல் இருந்திருக்கலாம், எகிப்தில் நடந்த முந்தைய கதையிலிருந்து ஒற்றுமைகளை வாசகர்களே இணைத்துக் கொள்வார்கள் என்று அறிந்திருந்தார்.

அபிமெலேக்கு சாராளை எடுத்தது அவளுடைய அழகிற்காக அல்லாமல், பொருளாதார அல்லத இராணுவ காரணங்களுக்காக என்று மற்றொரு விளக்கம் கூறுகிறது. 13:2 இன் படி ஆபிரகாம் மிகுந்த ஐஸ்வரியவானாயிருந்தான். மேலும், அவனுக்கு குறைந்தது 318 ஆண்களைக் கொண்ட ஒரு தனிப்படை இருந்தது (14:14). இந்த நேரத்தில், அவனுக்கு இன்னும் அதிகமான ஆடுகள், மாடுகள், மற்றும் போரிடும் மந்தை மேய்ப்பாளர்கள் இருந்திருக்கக்கூடும். அவன் ஒரு சக்தி வாய்ந்த அரேபிய குலமரபுத் தலைவனாக (ஷேக்) இருந்தான், மேலும் கேராருடைய பெலிஸ்திய இராஜா முற்பிதாவை கூட்டணி சேர்த்துக் கொள்ள விரும்பி யிருந்திருக்கலாம். இந்த கருத்துக்கு சில அங்கிகரிப்பு இருந்தாலும், அது 20:11ல் ஆபிரகாமுடைய பயத்தை கணக்கில் வைக்கவில்லை: “என் மனைவியினிமித்தம் என்னைக் கொன்று போடுவார்கள்.”

**வசனம் 3. தேவன் இரவிலே அபிமெலேக்குக்குச் சொப்பனத்திலே தோன்றி.** இது மற்றொரு அற்புதமான பகுதி ஏனென்றால் மெல்கிசெதேக் (14:18-20), பிலேயாம் (எண். 22-24), மற்றும் பார்வோன் நேகோ (2 நாளா. 35:22)[3] போல, ஆபிரகாமும் அவன் சந்ததிகளும் பழைய ஏற்பாட்டில் தேவனுடைய வெளிப்பாடுகளின் மேல் பிரத்தியேக உரிமை கொண் டிருக்கவில்லை என்பதை இது காட்டுகிறது. தேவன் தன்னை ராஜாவுக்கு வெளிப்படுத்தும் முன்பதாக எவ்வளவு நேரம் சென்றது என்று கதை வெளிப்படுத்தவில்லை. இருப்பினும், அது 20:17, 18 இல் அபிமெலேக்குடைய வீட்டிலுள்ள அனைத்து பெண்களுடைய கர்ப்பத்தையும் கர்த்தர் அடைத்திருந்தார், எனவே எந்தக் கருத்தரித்தலும் ஏற்படவில்லை என்று சொல்கிறது. அபிமெலேக்கு சாராளை எடுத்துக்கொள்ளுதலுக்கும், மேலும் ஒரு சொப்பனத்தில் தேவன் அவனை சந்தித்ததற்கும் இடையே உள்ள காலம் குறைந்தது பல மாதங்களாக இருக்குமென்று இந்த விவரம் வெளிப்படையாகக் கூறுகிறது. அனைத்து பெண்களும் தங்களால் கருவுற முடியவில்லை என்று அறிந்துக்கொள்ள இந்த காலம் எடுத்துக்கொள்ளப்படும்.

தேவன் வெளிப்படையாக ஒரு பயங்கரமான அறிக்கையின் மூலம் இராஜாவை எச்சரித்தார்: ***நீ அழைப்பித்த ஸ்திரீயினிமித்தம் நீ***

**செத்தாய். அவள் ஒருவனுடைய மனைவியாயிருக்கிறாளே என்றார்.** தொன்மையான உலகம் முழுவதும், விபச்சாரத்தின் தண்டனை மரணம், மேலும் அந்த தண்டனை பின்னர் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் சேர்க்கப்பட்டுள்ளது (லேவி. 20:10; உபா. 22:22). கூடுதலாக, இந்த சம்பவம் ஆதியாகமம் 12:17 இல் அவன் சாராளை அவனுடைய அந்தப்புரத்திற்கு எடுத்துச் சென்ற போது பார்வோனுடைய வீட்டின் மேல் விழுந்த வாதைகளை நினைப்பூட்டுகிறது. பார்வோன் அபிமெலேக் இருவரும் தெய்வீக சாபத்தை அனுபவித்தார்கள் (12:3 பார்க்கவும்). ஒவ்வொரு மனிதனும் ஆபிரகாமுடைய மனைவியை எடுத்துக்கொள்வதன் மூலம் அவனோடு ஒரு தவறான உறவில் இருந்தார்கள்.

**வசனம் 4. அபிமெலேக்** தன்னை பாதுகாத்துக்கொள்ள அவன் அவள் அருகில் வரவில்லையென்று கூறினான். קָרַב (*qarab*, குயாரப்) என்னும் எபிரெய வார்த்தை “நெருங்குதல்” அல்லது “அருகில் வருதலை” குறிக்கிறது; எனினும், இதுபோன்ற சூழல்களில், அது ஒரு பாலியல் தொடர்பில் ஈடுபடுவதை (லேவி. 18:6, 14, 19; உபா. 22:14; ஏசாயா 8:3), அதாவது இராஜா சாராளோடு தொடர்பு வைக்கவில்லை என்று வலுக்கட்டாயமாக மறுத்தான் என்பதைக் குறிக்கிறது.

இராஜா பின்னும் கர்த்தரிடத்தில்[4] அவர் **நீதியுள்ள ஜனங்களை அழிப்பாரோ** என்று கேட்டான். அபிமெலேக்கு தனக்கு மாறாக “ஜனங்கள்” என்று குறிப்பிட்டது ஏனென்றால், அவர்களுடைய இராஜாவின் மேல் அளவிடப்படும் எந்த தெய்வீக தண்டனையும் அந்த முழு நாட்டின் மீது விழும் என்று பண்டைய மக்கள் யூகித்தார்கள். கர்த்தருடைய சாபம் ஏற்கனவே ராஜாவின் மனைவியின் மேலும் மற்றும் அவருடைய வீட்டிலுள்ள மற்ற பெண்கள் மேலும் விழுந்தபடியினால் (20:17, 18), தேவன் எல்லா ஜனங்களையும் அழித்துவிடுவார் என்று அபிமெலேக்கு பயந்தான். அவனுடைய மனு என்னவென்றால், சாராள் திருமணமான பெண் என்று அவர்களில் ஒருவரும் அறிந்திராதபடியால், அவன் மற்றும் ஜனங்கள் இருவருமே இந்த விஷயத்தில் குற்றமற்றவர்கள் மேலும் அழிவுக்குரியவர்கள் அல்ல என்பதே.

**வசனம் 5.** இராஜா **இவள் என் சகோதரி** (20:2) என்ற ஆபிரகாமின் வார்த்தைகளையும் **அவன் என் சகோதரன்** என்ற சாராளின் கூற்றையும் நினைவுகூர்ந்து, தன் நிலையை அழுத்தினான் (12:13 பார்க்கவும்). இந்த முழு விஷயத்தில் அவனுடைய **உத்தமமான இருதயத்தையும் சுத்தமான கைகளையும்** தேவன் அங்கிகரிக்க வேண்டுமென்று அவன் கூறினான். “நேர்மை” என்று மொழிபெயர்க்கப்படும் (תֹּם, *thom*, தோம்) என்ற வார்த்தை, ராஜா “குற்றமற்ற” அல்லது “பூரணமான” இருதயத்தை வைத்திருந்தார் என்றும் மேலும் அவருடைய செயல்கள் எந்த தகாத நோக்கமுடையது அல்ல என்று அர்த்தப்படுகிறது. “குற்றமற்ற கைகள்,”

"பாவமில்லாத நடத்தை" என்னும் அர்த்தத்தின் ஒரு வெளிப்பாட்டை சுத்தமான கைகள் (சங். 24:4; 26:6; 73:13) குறிக்கிறது. சாராளின் நிமித்தம் சிந்தனை மற்றும் செயல் ஆகிய இரண்டிலும், அவனுக்கு தீய நோக்கம் இல்லை என்றும் குற்ற உணர்வு இல்லையென்றும் அபிமெலேக்கு கூறினான்.

**வசனம் 6. தேவன்** கனவில் அபிமெலேக்கிடம் பேசி மேலும் ராஜா சாராளை தன் அந்தப் புரத்திற்கு கொண்டு சென்றபோது **உத்தமமான இருதயத்தோடு** செயல்பட்டார் என்கிற உண்மை அவருக்கு தெரியுமென்று உறுதியளித்தார். இது தேவனுக்குத் தெரியும் என்பது மாத்திரமல்ல, **நீ எனக்கு விரோதமாகப் பாவம் செய்யாதபடிக்கு உன்னைத் தடுத்தேன்** என்றும் கூறினார். இந்த பிந்திய வாக்கியம் விபச்சாரத்தின் தீவிரத்தை வலியுறுத்துகிறது. அத்தகைய குற்றங்கள் சாதாரணமாக சாராள் மற்றும் ஆபிரகாமுக்கு விரோதமான செயலாக இருந்திருக்காது; மாறாக, இது அடிப்படையில், திருமண உறவின் அஸ்திபாரமும் அடிப் படையுமான தேவனுக்கு விரோதமான செயலாக இருந்திருக்கும் (2:18-25). தேவன் தான் சாராள் மேல் அபிமெலேக்குடைய பாலியல் ஆசைகளைத் தடுத்தார், அதினால் அவன் **அவளைத் தொடவில்லை** (பாலியல் ரீதியாக), மற்றும் சாவுக்கேதுவான காரியத்தை செய்யவும் அவர் (அவனுக்கு) இடங்கொடுக்கவில்லை என்றும் காட்டுகிறது.

**வசனம் 7.** சாராள், என்னும் மற்றொருவனுடைய மனைவியின் நிமித்தம், அபிமெலேக்கும் அவனுடைய மக்களும் சந்தித்த பிரச்சனையின் உண்மையான இயல்பை தேவன் அபிமெலேக்குக்கு தெரியப்படுத்தி, இந்த காரியத்தின் மேல் ராஜா செயல்படவேண்டும் என்று எதிர்பார்த்தார். ஒரு பொதுவான புறஜாதி தலைவன், ஆபிரகாம் தன்னிடத்தில் பொய் சொன்னதால் சாராளை வைத்துக்கொள்ள அவனுக்கு உரிமை இருக்கிறது என்று முடிவெடுத்து தன் சூழ்நிலையை நியாயப்படுத்தியிருக்கக்கூடும். இவ்வாறு நடைபெறாமல் தடுக்க, அவளுடைய கணவனிடம் சாராளை திரும்பக் கொடுக்க வேண்டுமென்றும் **அவன் ஒரு தீர்க்கதரிசி; நீ பிழைக்கும்படி அவன் உனக்காக வேண்டுதல் செய்வான்** என்றும் தேவன் அபிமெலேக்கிடம் கூறினார்.

வேதாகமத்தில் இது தான் முதல் முறை தீர்க்கதரிசி என்கிற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. மற்றவருக்காக ஜெபத்தில் மன்றாடுபவரை இது இங்கே குறிக்கிறது. பிந்திய தீர்க்கதரிசிகளாகிய - மோசே, சாமுவேல், எரேமியா, ஆமோஸ் மேலும் மற்றவர்கள் - இஸ்ரவேலருக்காக ஜெபித்தனர். எனினும், பொருத்தமான செய்தியை ஜனங்களுக்கு பிரகடனம் செய்யவும், நீதியான வாழ்க்கைக்கு வழிகாட்டும் போதனை கொடுத்தலும், அவர்கள் தோல்வியடையும் போது அவர்களுடைய பாவத்தை குறித்து உணர்த்தவும், அவர்கள்

விடாபடியாக எதிர்ப்பு தெரிவித்தால் வரவிருக்கும் பேரழிவை குறித்து எச்சரிக்கவும், மேலும் அவர்கள் மனம் திரும்பி அவரிடத்தில் திரும்பும்போது அவர்களுக்கு எதிர்காலத்தை குறித்து நம்பிக்கை கொடுக்கவும் தேவன் தீர்க்கதரிசிகளை பிரதானமாக அழைத்திருந்தார். ஆபிரகாம் ஏற்கனவே பரிந்துரையாளனாக சோதோமுக்கு பதிலாக செயல்பட்டிருந்தான் (18:23-33ஐ பார்க்கவும்) மேலும் அதே போன்ற தீர்க்கதரிசன செய்கையை அவன் செய்வான் அதினால் அவனும் அவனுடைய ஜனங்களும் தொடர்ந்து வாழமுடியுமென்று இப்போது தேவன் அபிமெலேக்குக்கு வாக்குத்தத்தம் செய்தார். அழுத்தம் சேர்க்கும்படியாக, அவன் சாராளை ஆபிரகாமிடம் திரும்ப **அனுப்பிவிடாதிருந்தால்,** அவனும் அவனைச் **சேர்ந்த யாவரும் சாகவே சாவார்கள் என்று** அவர் ராஜாவை எச்சரித்தார்.

## ஆபிரகாமோடு அபிமெலேக்கின் தீர்வு (20:8-18)

**8அபிமெலேக்கு அதிகாலையில் எழுந்து, தன்**
**ஊழியக்காரரையெல்லாம் அழைப்பித்து, இந்தச் சங்கதிகளை யெல்லாம்**
**அவர்கள் கேட்கும்படி சொன்னான்; அந்த மனுஷர் மிகவும் பயந்தார்கள்.**
**9அப்பொழுது அபிமெலேக்கு ஆபிரகாமை அழைப்பித்து: நீ எங்களுக்கு**
**என்ன காரியஞ்செய்தாய், நீ என்மேலும், என் ராஜ்யத்தின்மேலும்**
**கொடிய பாவம் சுமரப்பண்ணுகிறதற்கு உனக்கு நான் என்ன குற்றம்**
**செய்தேன்? செய்யத்தகாத காரியங்களை என்னிடத்தில் செய்தாயே**
**என்றான். 10பின்னும் அபிமெலேக்கு ஆபிரகாமை நோக்கி: என்னத்தைக்**
**கண்டு நீ இந்தக் காரியத்தைச் செய்தாய் என்றான். 11அதற்கு ஆபிரகாம்:**
**இவ்விடத்தில் தெய்வபயம் இல்லையென்றும், என் மனைவியினிமித்தம்**
**என்னைக் கொன்றுபோடுவார்கள் என்றும் நான் நினைத்தேன். 12அவள்**
**என் சகோதரி என்பதும் மெய்தான்; அவள் என் தகப்பனுக்குக் குமாரத்தி,**
**என் தாய்க்குக் குமாரத்தியல்ல; அவள் எனக்கு மனைவியானாள். 13என்**
**தகப்பன் வீட்டைவிட்டு தேவன் என்னைத் தேசாந்தரியாய்த்திரியும்படி**
**செய்தபோது, நான் அவளை நோக்கி: நாம் போகும் இடமெங்கும், நீ**
**என்னைச் சகோதரன் என்று சொல்வது நீ எனக்குச் செய்யவேண்டிய**
**தயை என்று அவளிடத்தில் சொல்லியிருந்தேன் என்றான்.**
**14அப்பொழுது அபிமெலேக்கு ஆடுமாடுகளையும், வேலைக்காரரையும்,**
**வேலைக்காரிகளையும் ஆபிரகாமுக்குக் கொடுத்து, அவன்**
**மனைவியாகிய சாராளையும் அவனிடத்தில் திரும்ப ஒப்புவித்தான்.**
**15பின்னும் அபிமெலேக்கு: இதோ, என் தேசம் உனக்கு முன்பாக**
**இருக்கிறது; உன் பார்வைக்குச் சம்மதியான இடத்திலே குடியிரு என்று**
**சொன்னான். 16பின்பு சாராளை நோக்கி: உன் சகோதரனுக்கு ஆயிரம்**
**வெள்ளிக்காசு கொடுத்தேன்; இதோ, உன்னோடிருக்கிற எல்லார்**
**முன்பாகவும், மற்ற யாவர் முன்பாகவும், இது உன் முகத்து**

**முக்காட்டுக்காவதாக என்றான்; இப்படி அவள் கடிந்து கொள்ளப்பட்டாள். [17]ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளின் நிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைத்திருந்தபடியால், [18]ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்; அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும், அவன் மனைவியையும், அவன் வேலைக்காரிகளையும் குணமாக்கி, பிள்ளைபெறும்படி அநுக்கிரகம் பண்ணினார்.**

**வசனம் 8.** தேவனிடத்திலிருந்து இந்த பயங்கரமான எச்சரிக்கையைப் பெற்ற பின்னர், **அபிமெலேக்கு** நேரத்தை வீணடிக்கவில்லை. அவன் **அதிகாலையில் எழுந்து, தன் ஊழியக்காரரையெல்லாம் அழைப்பித்து**, அவர்களுக்கு தேவனுடைய நயமான கண்டிப்பை தெரியப்படுத்தினான். அந்த அறிக்கையினால் **அந்த மனுஷர் மிகவும் பயந்தார்கள்.** ராஜாவினுடைய வேலைக்காரர்கள் தங்கள் ஆண்டவன் முன்பாக தோன்றும்படி ஆபிரகாமை அழைத்ததால் கொந்தளிப்பு ஏற்பட்டது.

**வசனம் 9. அபிமெலேக்கு** முற்பிதாவை குறுக்கு விசாரணை செய்தான், **நீ எங்களுக்கு என்ன காரியஞ்செய்தாய்?** என்று அவனுடையத் தொடர் கேள்விகளைத் தொடங்கினான். ராஜாவின் நீதிமன்றத்தில் அனைவருக்கும் ஆபிரகாமுடைய வஞ்சனையின் விவரமும் மற்றும் அவர்கள் மீது தொங்கிக் கொண்டிருந்த மரண அச்சுறுத்தலையும் அறிந்திருந்தபடியால், இந்த முதல் கேள்வி சொல்லணிக்கலை சார்ந்தது. எகிப்தின் பார்வோன், இதைப் போன்ற சூழ்நிலையில், இதே வகையான கேள்விகளை சாராளுடைய சகோதரனாக கருதப்பட்டவனிடம் கேட்டான் (12:18).

பதிலளிக்க ஆபிரகாமுக்கு நேரம் கொடுக்காமல், **நீ என் மேலும், என் ராஜ்யத்தின் மேலும் கொடிய பாவம் சுமரப்பண்ணுகிறதற்கு உனக்கு நான் என்ன குற்றம் செய்தேன்?** என்று தொடர்ந்து கேட்டான். பாவத்திற்கு பயன்படுத்தப்பட்டுள்ள (חַטָּאָה, *ch$^{a}$ta'ah,* ச்சாட்டா'ஆ) என்னும் பதம் "குற்றமுடைய" அல்லது "குற்றம்" என்கிற யோசனையை சுமந்து வரக்கூடும்,ஏனென்றால் விபச்சாரக் குற்றத்தை செய்தவர் பூர்வ மத்திய கிழக்கு நூல்களில் பெரும் குற்றத்தினுடைய குற்றவாளியாக கருதப்பட்டார். இந்த உணர்வில் அபிமெலேக்கு "நீ என் மேலும், என் ராஜ்யத்தின் மேலும் கொடிய பாவம் சுமரப்பண்ணுகிறதற்கு உனக்கு நான் என்ன குற்றம் செய்தேன்?" என்று கேட்டான்.

அடிப்படையான பாவம் ஆபிரகாமுடையது என்று தெளிவாக இருந்தபடியால், மறுபடியும், அவனுக்கு பதில் சொல்ல வேண்டிய நேரம் வழங்கப்படவில்லை. அவனுடைய பொய்க்குப் பிறகு தான் அபிமெலேக்கு சாராளை தன் அந்தப்புரத்திற்கு எடுத்து சென்றிருந்தார். எனவே ராஜா ஒரு கடினமான கடிந்து கொள்ளுதலை தொடர்ந்தார்:

**செய்யத்தகாத காரியங்களை என்னிடத்தில் செய்தாயே.** நிச்சயமாக, இது உண்மையாக இருந்தது. ஆபிரகாமும் சாராளும் பார்வோனை ஏமாற்றியபோது எகிப்தியர்களுக்கு இருந்த எந்த வகையான கீர்த்தியும் அபிமெலேக்குக்கு அல்லது அவருடைய மக்களுக்கு இல்லை. ஆபிரகாமுடைய பரந்த பரிவாரங்களுடன், அவரது ஆடுமாடுகள் உட்பட அனைவரும் தண்ணீருக்காகவும் உணவுக்காகவும் அபிமெலேக்குடைய நிலத்தின் குடிகளுடன் போட்டியிடலாம் என்ற போதிலும் தன் தேசத்தில் குடியேற அனுமதித்து, இந்த ராஜா அன்னியனிடம் இரக்கம் காட்டியிருந்தான். இந்த அன்னியன் கருணையுடன் பதிலளிக்க வேண்டுமென்றும் மேலும் அவன் மீதும் அவனுடைய ராஜ்யத்தின் மீதும் அக்கறை காண்பிக்க வேண்டுமென்றும் இந்த ராஜா எதிர்ப்பார்த்தான்.

**வசனம் 10.** நியாயமான கோபத்தில், **ஆபிரகாம்** தன்னுடைய கேள்விக்கு பதிலளிக்க வேண்டுமென்று கோரினார்: **என்னத்தைச் சந்தித்து நீ இந்தக் காரியத்தைச் செய்தாய்?** அந்த கேள்வியில் “சந்தித்து” என்பது רָאָה (*ra’ah*, ரா’ஆ “பார்”) என்ற எபிரெய வார்த்தையின் சரியான மொழிபெயர்ப்பு அல்ல. “என்னத்தைக் கண்டு நீ …?” என்று KJV நேரடியான மொழிபெயர்ப்பை கொடுக்கிறது, எனினும் இதற்கு சில விளக்கம் தேவைப்படுகிறது. “நீ எதை நினைத்துக்கொண்டு …?” என்னும் NRSV இன் மொழிபெயர்ப்பு உரையோடு நெருங்கிய அர்த்தமுடையது. ஜான் டி. வில்லிஸ் என்பவர் “நீ என்னத்தைப் பார்த்தாய் …?” என்று கேள்வியை இடையிட்டதின் மூலம் நேரடி மொழிபெயர்ப்புக்கும் எபிரெய விளக்கத்துக்கும் இடையே உரைக்கத்தக்க சமநிலையை ஏற்படுத்தி ஒரு சிறந்த வேலையை செய்ததாகத் தோன்றுகிறது. வேறு வார்த்தைகளில், “நீ என்ன நடக்கும் என்று எதிர்பார்த்து இந்த பொய்யை சொல்ல தூண்டியது?”[6] என்று அபிமெலேக்கு கேட்டான். இந்த முழு விவகாரமும், அவருடைய குடும்பத்தினர் மற்றும் அவருடைய ஊழியர்கள் முன்பு அபிமெலேக்குக்கு பெரிய சங்கடமாக இருந்தது. சாதாரணமான சூழ்நிலைகளின் கீழ், அது அநேகமாக ஆபிரகாமுக்கு தன்னுடைய வாழ்க்கையையே விலையாக்கியிருந்திருக்கலாம். இருப்பினும் தேவனுடைய எச்சரிக்கையினால் ராஜா முற்பிதாவை தண்டிக்க பயந்தான், அவனுடைய நியாயமான கேள்விகளுக்கு சில பதில்கள் பெறாமல் ஆபிரகாமை மன்னிக்கக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தான். இறுதியாக, ராஜா குற்றவாளியை பேச அனுமதித்தான்.

**வசனம் 11. ஆபிரகாம்** தன்னை பாதுகாப்பு செய்ய தொடங்கியபோது, அவன் தன்னையே கண்டனம் செய்து கொண்டான். **இவ்விடத்தில் தெய்வபயம் இல்லையென்றும், என் மனைவியினிமித்தம் என்னைக் கொன்றுபோடுவார்கள் என்றும்** நினைத்து அபிமெலேக்கையும் அவன் ஜனங்களையும் முன்முடிவு செய்ததாக

அவன் முதலில் ஒப்புக்கொண்டான் (12:11, 12; 20:2 இன் கருத்துகளை பார்க்கவும்). இந்த ஜனங்கள் மனித வாழ்க்கையை குறித்தும் அல்லது அடிப்படை ஒழுக்கநெறிகளை குறித்தும் அக்கறையற்றவர்கள் என்று தவறாக நினைத்திருந்தார். கிட்டத்தட்ட இருபத்தைந்து ஆண்டுகள் கானான் தேசத்தில் வாழ்ந்திருந்தான் மேலும் இதே போல் முன்பு பயமுறுத்தப்படாதிருந்தான் என்பதால், அங்கே முற்பிதாவினுடைய சொந்த அனுபவம் அவனுடைய பயத்தை குறைத்திருக்கலாம். இந்த முழு நேரத்தில் அவனுக்கு வந்த உடல் சார்ந்த அச்சுறுத்தல் பற்றி தான் நமக்கு தெரியும்: கிழக்கிலிருந்து வந்த ராஜாக்கள் படையெடுத்தல். இருப்பினும், தேவன் ஆபிரகாமுக்கும் அவன் தனிப்பட்ட படைக்கும், எமோரிய சகோதரர்களுடைய படைகளோடு சேர்த்து, படையெடுப்பாளர்கள் மேல் ஒரு எளிதான வெற்றியை தந்திருந்தார் (14:13-16).

இந்த துக்ககரமான நிகழ்ச்சியானது, ஆபிரகாம் மெசபெத்தோமியாவிலிருந்து அவனை அழைத்து வந்த கர்த்தரையும், மற்றும் ஏராளமான செல்வத்துடனும், ஆட்டு மந்தைகள் மற்றும் கால்நடைகளுடனும்; அவனை ஆசீர்வதித்ததையும், ஏறத்தாள அவன் மறந்துவிட்ட தோற்றமுடையதாக, விஸ்தாரமான அமைப்பில் பார்க்கும்படியாக ஆதியாகமத்தில் வரையறுக்கப்பட்டுள்ளது. இத்துடன், அவனுக்கு நூற்றுக்கணக்கான கைபடிந்தவர்களாகிய வேலையாட்கள் இருந்தார்கள் (14:14) என்றும், உண்மையாகவே, அவனுக்கு சுயமாக பெரிய சேனையானது கானானில் இருந்திருக்க வேண்டும். இப்படியிருக்க, அவன் ஏன் பயந்திருக்க வேண்டும்? அவன் விசுவாசத்தை இழந்து விட்டானோ? “ஆபிரகாமே, நீ பயப்படாதே; நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகா பெரிய பலனுமாயிருக்கிறேன்” (15:1) என்று சொன்ன கர்த்தருடைய வார்த்தையை இதற்கு மேலும் அவனால் நம்ப முடியவில்லையா? நான் அவளை ஆசீர்வதித்து, அவளாலே உனக்கு ஒரு குமாரனையும் தருவேன்; அவள் ஜாதிகளுக்குத் தாயாகவும், அவளாலே ஜாதிகளின் ராஜாக்கள் உண்டாகவும், அவளை ஆசீர்வதிப்பேன் (17:16, 17; 18:10-14) என்று தேவன் ஆபிரகாமிடம், மிகவும் சமீபமாக, அதுவும் ஒரு வருடத்திற்குள்ளாக அளித்த வாக்குத்தத்தத்தின் மீது அவனுக்கு நம்பிக்கை இல்லையா? இது, ஆபிரகாமின் வாழ்க்கையில், நிச்சயமாக தரக்குறைவான ஒன்றாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. சாராளை அபிமெலேக்குக்கு ஒரு மனைவியாக கொடுப்பதன் மூலம், அவன், அவனுடைய சொந்த சரீரத்தின் மூலம் அவளுக்கு ஒரு குமாரனைக் கொடுப்பேன் என்று கர்த்தர் கொடுத்த வாக்குத்தத்தத்தைச் சின்னாபின்னமாக்குவதற்குத் தயாராக இருந்தான்.

**வசனம் 12.** சீரமைப்பு மற்றும் வஞ்சனை என்பதன் ஒரு பரிதாபத்திற்குரிய உதாரணமாக ஆபிரகாமுடைய இரண்டாவது

வாக்குவாதம் இருக்கிறது. **அவள் என் சகோதரி என்பதும் மெய்தான்; அவள் என் தகப்பனுக்கு குமாரத்தி, என் தாய்க்கு குமாரத்தியல்ல** என்று அவன் சாராளைக் குறித்து பொய் சொல்லவில்லை என்று சொல்லிக் கொண்டிருந்தாலும், அவன் குறிப்பிட்ட உறவு முறையைப் பயன்படுத்தி உரிமை கொண்டாடியுள்ளான். இது பாதி உண்மையாயிருந்தாலும், அவனுக்கு சாதகமாக, அவள் அவனது **மனைவி** என்ற ஸ்தானத்தை விட்டு விட்டான். கோத்திரத் தலைவனுடைய வாக்குமூலம் பகுதி உண்மையாயிருந்தாலும், ராஜாவை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கம் உடையவனாய் இருந்தபடியால், அது நிச்சயமாகவே ஒரு பொய்யாகவே உள்ளது.

**வசனம் 13.** ஆபிரகாமுடைய கடைசி பாகமான தற்பாதுகாப்பும் கூட பலவீனமாகவே உள்ளது. அவர்கள் ராஜாவிடம் சொன்ன பொய்யானது, அவர்கள் வழக்கமாக செயல்படும் காரியம்தான் என்று சொல்லி அவன் பாவத்தை ஒப்புக்கொள்ளுவது திகைப்பானதாய் உள்ளது. **நாம் போகும் இடமெங்கும், நீ என்னை சகோதரன் என்று சொல்வது நீ எனக்குச் செய்ய வேண்டிய தயை** என்று கோத்திரத்தலைவன் சாராளிடம் சொல்லியிருந்தான். இந்த பத்தியில் வரும் “தயை” என்ற பதமானது அடிக்கடி மொழிபெயர்ப்பில் (חֶסֶד, *chesed*, செஸ்ஸடு) என்றும், “இணை பிரியாத அன்பு” (NRSV) மற்றும் “தயையுள்ள அன்பு” (NASB), அல்லது சாதாரணமாக “அன்பு” (NIV) என்று பொருள்படியாகவும் உள்ளது. ஆபிரகாம் சாராளிடம் “நான் சாதாரணமாக உன்னுடைய சகோதரன் என்ற உறவைக் கையாண்டு கொண்டிருந்தால், நீ எப்படி உன்னுடைய அன்பை [*chesed*] என்னிடம் வெளிக்காட்ட முடியும்” என்ற எண்ணம் ஆபிரகாமின் மனதில் தோன்றியவுடன், அதன் விளைவாக இந்தச் செயலுக்கு முற்றுப் புள்ளி வைத்திருக்கப்பட்டிருக்கும். எகிப்திலே பார்வோனுக்கு முன்பாக, இந்த மாதிரியான தவறானதை நம்ப வைக்கும் காரியமானது, அவர்கள் முதன் முதலில் பதிவு செய்யப்பட்ட உரையின் சாட்சியாகவும் (12:10-20), மற்றும் இதைப் போன்று வேறு சந்தர்ப்பங்களிலும் இந்த மாதிரியான தந்திரத்தை அவர்கள் கையாண்டிருக்க வேண்டும் என்பதை ஆபிரகாமின் வாக்குமூலமானது அறிவுறுத்துகிறது. எப்படி இருந்தாலும், இந்த இரண்டு சம்பவங்களையே விரிவுரையாளர் பதிவு செய்திருப்பதால், இதே மாதிரியான வேறு சந்தர்ப்பங்களும் இருந்திருக்கலாம் என்பது வெறும் ஊகித்தலே ஆகும்.

**வசனம் 14.** ஆபிரகாமும், சாராளும் அவர்களது உறவுமுறையைக் குறித்து பார்வோனிடம் முதன் முதலில் பொய் சொல்லிய போது, அவர்கள் ஏமாற்றியதைக் கண்டுபிடிப்பதற்கு முன், கோத்திரத் தலைவன் விலையுயர்ந்த வெகுமானங்களை ராஜாவிடமிருந்து பெற்றுக் கொண்டான் (12:16). இந்த நிகழ்வில், கோத்திரத் தலைவனுடைய மனைவி சாராள்தான் என்ற உண்மையை கண்டறிந்த பின்,

**அபிமெலேக்கு** விலையுயர்ந்த வெகுமானமாக **ஆடு மாடுகளையும், வேலைக்காரரையும் மற்றும் வேலைக்காரிகளையும்** (அடிமைகள்) கொடுத்தான். பார்வோன் ஒரு மணமகளுக்காக அமைக்கப்பட்டதான வெகுமதிகளை, பொதுவாக அவளுடைய தகப்பனுக்கோ அல்லது அவர் மரித்து போயிருந்தால் அவளது சகோதரனுக்கு கொடுப்பது போல இது காணப்பட்டாலும், கிழக்குக்கு அருகாமையில் பழங்காலங்களில் உள்ள சட்டங்களுக்கு பொருந்துமாறு இச்செயல் உள்ளது. அபிமெலேக்கு சாராளை அவளுடைய அந்தப்புரத்திற்கு எடுத்துச் சென்று, அறியாமல் ஆபிரகாமிற்கு இழப்பீடு ஏற்படுத்தியதற்கு நஷ்ட ஈடாக, கேராரின் ராஜா தீங்கிழைக்கப்பட்ட புருஷனுக்கு வெகுமதிகளைக் கொடுத்தான். பிறகு, ராஜா **அவனுடைய மனைவியாகிய சாராளை அவனிடம் திரும்ப ஒப்புவித்தான்.**

**வசனம் 15. இதோ, என் தேசம் உனக்கு முன்பாக இருக்கிறது; உன் பார்வைக்குச் சம்மதியான இடத்திலே குடியிரு** என்று சொன்ன **அபிமெலேக்கின்** வாக்குமூலத்தின்படி, மறுபடியும் அவனுடைய உயர் பண்புடைமையானது வலியுறுத்தப்பட்டுள்ளது. பல தெய்வ வணக்கம் கொண்ட இந்த ராஜா, அயல் தேசத்து மனிதனால் அவன் ஏமாற்றப்பட்டவனாயும், அல்லற்படுத்தப் பட்டவனாயும் மற்றும் வெட்கப்படுத்தப்பட்டவனாயும் இருந்த போதிலும், அவன் பார்வைக்குச் சம்மதியான இடத்திலே அவனுடைய பரிவாரங்களுடன் குடியிருக்க அனுமதித்தது ஆச்சரியப்படத்தக்க உண்மையாயிருக்கிறது. பார்வோன் அவனைக் குறித்துத் தன் மனுஷருக்குக் கட்டளை கொடுத்தான்; அவர்கள் அவனையும், அவன் மனைவியையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் அனுப்பி விட்டார்கள் (12:20) என்பதைப் பார்க்கும் போது, எகிப்திலுள்ள பார்வோன் ஆபிரகாமுக்கும், சாராளுக்கும் எதிராக எடுத்த நடவடிக்கைக்கு இவனுடைய பதில் அப்பட்டமான நேர் எதிர் மறையானதாய் இருக்கிறது. ராஜா ஆபிரகாமுடைய சரீர சுகமளிக்கும் வரங்கள் மற்றும் அவனுடைய மக்கள் ஆபிரகாமுடைய விண்ணப்பங்கள் மற்றும் தயையை சார்ந்துள்ளார்கள் என்பதை அறிந்திருந்தபடியால், ஆபிரகாமை கிருபையாய் நடத்தும் வகைக்கான காரணம் என சான்று பகருகின்றது.

**வசனம் 16.** மிருக ஜீவன்களையும், அடிமைகளையும் கொடுத்த பின் (20:14) அதைச் சம்பந்தப்படுத்தி அத்துடன், பின்னும் அபிமெலேக்கு **சாராள்** பக்கம் திரும்பி, அவளுடைய **சகோதரனுக்கு ஆயிரம்**[7] **வெள்ளிக் காசு கொடுத்தேன்** என்றான். அபிமெலேக்கு அவளுடைய “கணவன்” என்று சொல்வதற்குப் பதில், சாராளுடைய “சகோதரன்” என்று சொன்னது குறிப்பிடப்பட்டுள்ளது. ஆபிரகாமும் சாராளும் அவனை ஏமாற்றிய அந்த உண்மை சம்பவத்தின் வருத்தத்திலிருந்து இன்னும் ராஜா வெளிவரவில்லை. வெள்ளிக் காசைப் பற்றி அவன் “இதோ,

உன்னோடிருக்கிற எல்லார் முன்பாகவும், மற்ற யாவர் முன்பாகவும், இது உன் முகத்து முக்காட்டுக்காவதாக" என்றான்.

"முக்காடு" (כְּסוּת עֵינַיִם, *k$^e$suth 'eynayim*, கெசுதேநயிம்) என்பதற்கு எபிரெய மொழியில் "கண்களின் ஒரு மறைப்பு" (KJV) என்று உண்மையான அர்த்தங்கொடுக்கிறது. NIV ஆன புதிய சர்வ தேச மொழிபெயர்ப்பானது, "குற்றத்தை மறைப்பதற்கு" என்று வழங்குவதுடன், ராஜா சாராளை அவரது அந்தப்புரத்திற்கு எடுத்துச் சென்ற சந்தர்ப்பத்தை, ஆபிரகாமுடைய கூட்டாளிகள் ஒவ்வொருவரின் கண்களை மறைக்கும்படியாகவும் அல்லது அவர்கள் கேட்கக்கூடும் என்பதை சுட்டிக்காட்டுகிறது. அபிமெலேக்கு அவள் ஆபிரகாமின் மனைவி என்று தெரியாததினால், அவனது நோக்கம் தப்பானதல்ல என்பது ஒவ்வொருவரும் அறிந்த ஒன்றே ஆகும். மேலும், அவள் ராஜாவின் வீட்டில் இருந்த போதிலும், அவன் பாலியல் ரீதியாக அவளைத் தொடவில்லை. ஆகவே, இந்த அனுபவத்திற்காக, சாராளை ஒருவரும் வெறுக்கவோ அல்லது இழிவுபடுத்தவோ கூடாது. அந்த உணர்வின்படி, அவள் குற்றச்சாட்டிலிருந்து "முழுவதுமாக நிரூபிக்கப்பட்டு" (NEB) விலக்கு அளிக்கப்படுகிறாள்.

**வசனங்கள் 17, 18.** அபிமெலேக்கு அவன் செய்த தவறுகளைச் சரி செய்ய தக்க நடவடிக்கைகளை எடுத்த பிறகு, வெறுப்பூட்டுகிற கிளை சரித்திரமானது முடிவிற்கு வந்துள்ளது. பிறகு, **ஆபிரகாம் தேவனை நோக்கி வேண்டிக்கொண்டான்; அப்பொழுது தேவன் அபிமெலேக்கையும், அவன் மனைவியையும், அவன் வேலைக் காரிகளையும் குணமாக்கி, பிள்ளை பெறும்படி அநுக்கிரகம் பண்ணினார்**. "சகோதரன்" என்ற வார்த்தையானது, இதற்கு முந்தின வசனத்திலே முரண்பாடாக பயன்படுத்தப்பட்டது போல, முரண்பாடு என்பதற்கு மற்றொரு உதாரணமாக இங்கே காணப்படுகிறது. ஆபிரகாம் தேவனிடத்தில் வேண்டிக் கொண்ட பின்பு, அபிமெலேக்கு வீட்டில் இருந்த பெண்கள் அனைவரும் மறுபடியும் பிள்ளைகள் பெறும்படி வழிவகுக்கப்பட்டது. **ஆபிரகாமுடைய மனைவியாகிய சாராளின் நிமித்தம் கர்த்தர் அபிமெலேக்குடைய வீட்டாரின் கர்ப்பங்களையெல்லாம் அடைத்திருந்ததே**, அவர்களெல்லாரும் மலடியாயிருந்ததற்கான காரணமாய் அமைந்தது. அவர்கள் திருமணத்திற்கு பிறகு பல வருடங்கள் ஆகியும், அவர்களது விசுவாசமானது சோதிக்கப்பட்டு, சாராளுடைய கர்ப்பம் இன்னும் அடைபட்டிருந்த வேளையில், பல தெய்வ வணக்கங்கள் கொண்ட ஒரு ராஜாவிற்காகவும் மற்றும் அவனது மனைவிகளுக்காகவும் ஆபிரகாம் ஏறெடுத்த விண்ணப்பமானது எவ்வாறு வல்லமையுள்ளதாயிருந்தது (16:2)?

அடுத்த அதிகாரத்திலே, ஏமாற்றத்திலே பல வருடங்கள் கடந்த பின், இறுதியாக பெரும் மகிழ்ச்சிக்கான வழியைக் கொடுத்தார். சாராளுடைய

வயதான காலத்திலே, கர்த்தர் அவளது கர்ப்பத்தையும் திறந்து, கர்ப்பவதியாகி வாக்குத்தத்த பிள்ளையைக் கொடுத்தார்.

## நடைமுறை

### பொய் சொல்லுவதில் அபாயம் (அதிகாரம் 20)

*தேவைக்கேற்ப சீரமைப்பு செய்யுமாறு அடிக்கடி மக்கள் கூறும் பொய்யானது ஒரு பாவமாயிருக்கிறது*. நிறைய நேரங்களில், ஒவ்வொருவரும் பொய் சொல்வது ஏனென்றால் அவர்களது சுய விருப்பத்திற்காகவும் அல்லது சுய நலன்களுக்காகவும் அது வேண்டுகோள் விடுக்கிறது என்று அவர்கள் நம்புகிறார்கள். அதைப் போலவே, மற்றொருவருக்கோ அல்லது ஒரு சமுதாயம் முழுமைக்கும் நன்மையுண்டாக சொல்லும் ஒரு பொய்யானது அவர்களுக்கு சீரமைப்பாக இருக்கலாம். ஏனென்றால், அதிகப்படியான பொய்யானது இந்த வழியில் நியாயப்படுத்தப்படுவதுடன், பொய் சொல்லும் ஒரு பழக்கவழக்கத்தை வளர்த்துக் கொள்வதும் சுலபமான ஒன்றாய் இருக்கிறது. வழக்கமாக, ஆபிரகாமும், சாராளும் அவர்களது கணவன், மனைவி என்ற உண்மையான உறவு முறையைப் பற்றி பொய் சொல்வது என்ற ஒரு பழக்க வழக்கத்தை ஆபிரகாமும், சாராளும் நேர்த்தியாய் செய்துள்ளார்கள். ஆதியாகமம் 20:13இல், பல வருடங்களுக்கு முன் கர்த்தருடைய கட்டளையை பெற்ற பிறகு மெசெப்பொத்தொமியாவில் "என் [அவனுடைய] தகப்பன் வீட்டை விட்டு தேவன் என்னைத் தேசாந்தரியாய்த் திரியும்படி செய்த போது," நான் அவளை நோக்கி: "நாம் போகும் இடமெங்கும், நீ என்னைச் சகோதரன் என்று சொல்வது நீ எனக்குச் செய்ய வேண்டிய தயை என்று அவளிடத்தில் சொல்லியிருந்தேன்" என்று கோத்திரத் தலைவன் அபிமலேக்கிடம் ஒத்துக்கொண்டான்.

ஆதியாகமமானது அவர்கள் இந்த திட்டத்தைப் பயன்படுத்தியதை (12:11-13; 20:2), இரண்டு உதாரணங்களை மட்டுமே பதிவு செய்த போதிலும், இந்த மூல உபாயத்தை முதலில் செயல்படுத்தியதிலிருந்து இருபத்து நான்கு வருட இடை வெளியில், இதைப் போன்ற வேறு சந்தர்ப்பங்கள் இருந்திருந்தாலும், விரிவுரையாளர் வெளிக்காட்டாமல் இருந்திருக்கக்கூடும். சாராளுடைய நலனைப் பற்றி சிந்திக்காமல், ஆபிரகாம் முதன்மையான அவனுடைய நலனைப் பற்றிய சிந்தையில் இருந்ததை, அவன் இந்த மாதிரியான பொய்யைக் கூறி நியாயப் படுத்துவதற்கு சான்றாக உள்ளது. இரண்டு நிகழ்ச்சிகளிலும், அவனுக்கு ஏதாவது நேர்ந்து விடக்கூடும் என்ற எண்ணத்திலும், அவனது உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையிலும் (12:12; 20:11), இந்தப் பொறுப்பின் முழுப் பாரத்தையும் அவனுடைய மனைவியின் மீது சுமத்தியவனாய்,

இம்மாதிரியான ஒரு பொய்யை நியாயப்படுத்தியுள்ளான். இத்துடன், கோத்திரத் தலைவன் அவனுடைய பொய்யானது பார்வோனையும், அபிமெலேக்கையும் அல்லது மற்ற மக்களையும் எந்த அளவு பாதித்திருக்கக்கூடும் என்பதை அவள் பொருட்படுத்தவில்லை.

ஆபிரகாமும், சாராளும் சிறிது உண்மையுள்ள காரியத்தில் ஒன்று சேர்ந்திருந்தாலும், இந்தப் பொய்யின் தன்மையானது, சிறிதும் உண்மையில்லாததும் அழிந்து போகக் கூடியதாயும் இருந்துள்ளது. ஒரு சிறிய உண்மை கலந்த பொய்யானது, பொய்யை அதிக நாவுக்கினியதாயும் மற்றும் வஞ்சனையானதாயும் ஆக்குகிறது. கீழ்கண்ட சரித்திரப் பூர்வமான உதாரணங்களில் காணமுடிகிறது: ஏதேன் தோட்டத்தில் சாத்தானால் ஏவாள் (ஆதாமும் கூட) வஞ்சிக்கப்பட்டது (2:17; 3:1-13); ஆபேலைக் கொலை செய்த பின், காயீன் கர்த்தரிடம் சொன்ன பொய்யான பதில் (4:8, 9); மற்றும் அனனியாவும், சப்பீராளும் சபையாருக்கும் மற்றும் தேவனுக்கும் முன்பாக பொய் சொல்லியவையும் ஆகும் (அப். 5:1-11).

மனிதன் பொய் சொல்லும் ஓர் இயற்கை குணம் கொண்டவனாய் இருக்கிறான். இயேசுவின் போதனைகள் (மத். 19:18) மற்றும் ஆரம்ப கால சபை (எபே. 4:25; கொலோ. 3:8, 9; யாக். 3:14) இவைகளிலும், பத்து கட்டளைகளானது (யாத். 20:16) பரிசுத்த தொகுப்பாயும் (லேவி. 19:11, 12), இது தவிர்க்கப்பட வேண்டியது என்று உள்ளது. எபிரெயர் 12:1இல் உள்ள வார்த்தைகளின்படி பொய் சொல்வது ஒரு பாலம் என்றும், மேலும் ஆபிரகாம் செய்தது போல அது நம்மை சுலபமாக சிக்க வைத்து விடும். கோத்திரத் தலைவன் அவன் செய்ததை ஒத்துக் கொண்டதைப்போல (20:13) நமக்கு இது ஒரு நடைமுறைப் பழக்கமாக மாறிவிடாதவாறு, இதை அனுமதிக்கக் கூடாது.

*விசுவாசத்தில் ஒரு குறைவு வரும் போது, பொய்யானது அடிக்கடி அதனுடைய வேரை விடுகிறது*. விசுவாசிகளின் தகப்பன் (ரோமர் 4:11, 16) என்று ஆபிரகாம் மறை நூல்களில் பாராட்டப்பட்டிருந்தாலும், அடிக்கடி அவனுடைய விசுவாசத்துடன் போராடியுள்ளான். கர்த்தர் அவனை பல வருடங்களாக எண்ணற்ற வழிகளில் ஆசீர்வதித்திருந்தார், இருந்த போதிலும் கர்த்தரை நம்பி “விசுவாசத்தில்” (2 கொரி. 5:7) நடப்பதை விட, “பார்வையின் படி” நடக்க முயற்சித்தான்.

கர்த்தருடைய உதவியுடன், ஆபிரகாமின் கைபடிந்தவர்களாகிய ஆட்கள் கிழக்கத்திய ராஜாக்கள் நால்வரையும் ஜெயித்தார்கள் (14:14-20), மற்றும் அபிமெலேக்கினுடைய தாக்குதலுக்கு ஒரு வாய்ப்பு இருந்தால், அவர் அவனை நிச்சயமாக பாதுகாத்திருக்க முடியும். ஆபிரகாம் உண்மையான “விசுவாசக் கேடகமாய்” (ஆதி. 15:1; எபே. 6:16) உள்ள கர்த்தரை நம்பாமல், இந்த பாமரத் தன்மையான ராஜாவிற்கும், மற்றும் அவனது சேனைக்கும் பயந்து பொய் சொன்னான் என்பதில் சந்தேகம் இல்லை. நீண்ட காலமாக, அதிக

திரளாய் அவனை ஆசீர்வதித்த ("*சர்வ வல்லமையுள்ள தேவனை*"; 17:1) *எல்ஷடாய்* ஐ அவன் மறந்து விட்டான்.

இந்த மாதிரியான அனுபவத்திற்குள் இயேசுவின் சீஷர்களும் சென்றார்கள். பாலஸ்தீன பூமியெங்கும், அவர்களுடைய தொழில்களை விட்டுவிட்டு அவரைப் பின்பற்றுவதற்குப் போதுமான விசுவாசம் அவர்களிடம் இருந்தது. அவர்கள் அவருடைய குணமாக்கும் அற்புதங்களைப் பார்த்ததினால், அவர்களது விசுவாசம் பெலப்பட்டது. இருந்தபோதிலும், கலிலேயாக் கடலின் ஒரு புயலின் மத்தியிலே, அவர்களுடைய விசுவாசத்தை அவர்கள் கைவிட்டார்கள். அவர்களது விசுவாசமில்லாமையைக் கண்டு, இயேசு அவர்களைக் கடிந்து கொண்டார் (மாற்கு 4:40).

மற்றொரு சந்தர்ப்பத்தில், "கடுகு விதையளவு" விசுவாசம் உங்களுக்கு இருந்தால், உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது (மத். 17:20) என்றும் அவர்களது விசுவாசம் மிகவும் குறைவாக இருப்பதால், அதை இன்னும் அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்று கர்த்தர் கூறினார். கர்த்தர் மேலுள்ள அவர்களது விசுவாசம் வரவர நலிவுற்றது. ஆகையால், அது ஆபிரகாமிடமும் மற்றும் வேறு தேவ மனிதர்களிடமும் இருந்ததைப் போல, நம்முடனும் இருக்கிறது. விசுவாசிக்கும் ஒரு இருதயத்திலும் கூட எப்பொழுதும் சில அவிசுவாசம் குடி கொண்டிருக்கும் என்ற அபாயம் அங்கே இருக்கிறது (மாற்கு 9:24).

12:17-19ல், இதே பொய்யினால்தான் கர்த்தர் பார்வோனையும், அவன் வீட்டாரையும் மகா வாதைகளால் வாதித்தார் என்றும், 20:9-13லும் ஆபிரகாம், அவனுடைய ஏமாற்றிய காரியம் குறித்த விசாரணைக்காக, அந்தந்த இடத்திற்குரிய ஆட்சியாளர் முன்பாக வரவழைக்கப்பட்டு சங்கடத்தை அவனுக்கு ஏற்படுத்தியது. வாக்குத்தத்த பூமி வரை பாதுகாத்து அழைத்து வந்தவரும் மற்றும் அவன் கீழ்ப்படியாமல் அல்லது சிறிது கீழ்ப்படிந்தபோதும் அவன்மேல் கரிசனையாய் இருந்தவருமாகிய கர்த்தரிடம் அவனுடைய விசுவாசத்தை வைக்க வேண்டும் என்ற அவனுடைய படிப்பினையை அவன் ஏன் கற்றுக் கொள்ளவில்லை?

*பொய்யானது அடிக்கடி அதிகப்படியான கஷ்டத்தை விளைவிக்கிறது*. ஆபிரகாம் யாருடனெல்லாம் தொடர்பு வைத்திருந்தானோ, அவர்களுக்கெல்லாம் ஒரு ஆசீர்வாதமாக இருக்க வேண்டியதில்லை. முரண்பாடாக, அவனுடைய பொய்களினால், அவன் ஒரு விவகாரம் பண்ணுபவனாய் இருந்தான். எகிப்தில் ஆசீர்வாதங்களுக்குப் பதில், கோத்திரத் தலைவன் சாராளைப் பற்றி கூறிய பொய்யினால், பார்வோனுடைய வீட்டார்களுக்கு மகா வாதைகள் வந்தன (12:17). அதைப் போல, கேராரில் ஆபிரகாம் இந்தப் பொய்யைச் சொன்னதினிமித்தம், அபிமெலேக்குக்கு அல்லற்படுதலையும், மற்றும் சாவுக்குரிய பயமுறுத்தலையும் கொண்டு

வந்தது (20:3, 7, 17). அது, அபிமெலேக்குடைய வீட்டாரின் "கர்ப்பங்களையெல்லாம் அடைத்திருக்கும்படி" செய்தது (20:18).

இதே மாதிரியாக, தாவீதின் வஞ்சனையான பொய்யானது, அவன் ஏத்தியனான உரியாவின் மனைவி பத்சேபாளிடம் ஒழுக்கக் கேடாக நடந்து கொண்டதை மறைப்பதற்காக இறுதியில் ராஜாவின் கௌரவமிக்க அந்த சேவகனின் உயிரை யுத்த களத்திலே மாய்க்கும்படியும் செய்தது (2 சாமு. 12:10). இத்துடன், ஒழுக்கக்கேடான கூட்டினால் பிறந்த அந்த குழந்தையும் இறந்ததும் அல்லாமல், பட்டயம் என்றைக்கும் உன் வீட்டை விட்டு விலகாதிருக்கும் (2 சாமு. 11:1-27). என்பதுடன், அவனுடைய குழந்தைகள் ஒருவருக்கொருவர் எதிராக பாவம் செய்வதும், மற்றும் அவர்களுடைய தகப்பன் கற்பழிப்பு, கொலை, உள்நாட்டுப் போர் ஆகியவற்றின் பாவங்கள் மற்றும் யுத்தங்களில் மடிவார்கள் (2 சாமு. 13-18). இவ்வாறு, ராஜா அவனுடைய ஒழுக்கக்கேடு, மற்றும், உரியாவின் மனைவியுடன் உள்ள தொடர்பை மறைப்பதற்கு முயற்சித்ததற்கும், மற்றும் அவனது கௌர வத்திற்குரிய பெரிய சேவகன் ஒருவனைக் (2 சாமு. 23:22, 39; 1 நாளா. 11:26, 41) கொலை செய்ததன் விளைவாக இன் னலுக்குள்ளாகி அவன் கஷ்டப்பட்டுக் கொண்டிருப்பதுடன், அதற்கான ஒரு பெரிய விலையைக் கொடுத்தான்.

"துரோகிகளுடைய வழியோ கரடுமுரடானது" (நீதி. 13:15; KJV) என்று ஞானி ஒரு முறை சொல்லியுள்ளார். "துரோகிகள்" என்பதற்கான எபிரெய பதம் வினைச்சொல்லிலிருந்து வந்த ஒரு பன்மை பெயரெச்சமாக בָּגַד (*bagad*, பகட்) என்பது "சாதாரணமாக மனித உறவுகளில் எதிர்பார்க்கப்பட்டுள்ள சமுதாய பொறுப்புகளில்."[8] "துரோகத்துடன் நடந்து கொள்" அல்லது "ஏமாற்றும் பேரம்" என்ற அர்த்தம் கொடுக்கிறது. ஆபிரகாம் "இவ்விடத்தில் தெய்வ பயம் இல்லை என்றும்" (20:11) என்ற தூர நோக்குடன், அதன் அடிப்படையில் அபிமெலேக்கிடம் சாராளைப் பற்றி பொய் சொல்லியுள்ளான். இல்லாவிடில், சாதாரணமாக கணவன், மனைவி என்ற மனித உறவு முறையை, பல தெய்வ வணக்கம் கொண்டவர்கள் மதிக்க மாட்டார்கள் என அவன் நினைத்திருந்தான்.

ஏறத்தாள இருபத்தி நான்கு வருடங்களாக கோத்திரத் தலைவன் கானானின் பூமியில் வாழ்ந்த காலங்களில், நமக்குத் தெரிந்த வகையில் மற்ற உள்நாட்டு ஆட்சியாளர்களுடன் இதைப் போன்ற ஒரு பிரச்சனையை அவன் அனுபவித்திருக்கவில்லை. ஆபிரகாம் அவன் செய்ததை விட, இந்த பல தெய்வ வணக்கம் கொண்ட ராஜா திருமணத்தைப் பற்றி ஒரு உயர்ந்த அறிவுப் பூர்வமான நற்போதனைகள் கொண்ட சடங்காக கையாள்வதை அவனிடமிருந்து கற்றுக் கொள்வதுடன், அவனுக்கு அதிக வெட்கத்தை தரும்படியாகவும் இருந்தது. "உத்தம இருதயத்தோடும் சுத்தமான கைகளோடும் இதைச்

செய்தேன்" (20:5) என்று அபிமெலேக்கு சாராளை அவனுடைய அந்தப்புரத்திற்கு எடுத்துச் சென்றதை உறுதிப்படுத்தியுள்ளார். இது கோத்திரத் தலைவன் சாராளுடன் அவனுடைய உண்மையான உறவு முறையைக் குறித்து, ஏமாற்றியும் மற்றும் துரோகம் செய்தும் நடித்து பொய்யுரைத்தான்.

எல்லா சந்ததியிலும் உள்ள கர்த்தருடைய பிள்ளைகளுக்கு, ஆபிரகாமுடைய பொய்யானது ஒரு எச்சரிப்பாக நிலைத்து நிற்கிறது. ஏமாற்றுவதை வார்த்தையிலும், மற்றும் செயலிலும் சீரமைப்பது சுலபமாய் இருக்கிறது. கர்த்தருடைய பிள்ளைகள் தூண்டுதல்களைத் தங்கள் வழிகளில் செயல்படுத்தவும் மற்றும் பேசவும் எதிர்ப்புத் தன்மை இல்லாமல் இருக்கிறார்கள் என்பது, பல தெய்வ வணக்கம் கொண்டவர்களுக்குக் கூட அதிர்ச்சி உடையதாய் இருந்திருக்கும். "தேவனுடைய நாமம் புறஜாதிகளுக்குள்ளே [பல தெய்வ வணக்கம் கொண்ட அவிசுவாசிகள்] உங்கள் மூலமாய் தூஷிக்கப்படுகிறதே" (ரோமர் 2:24; 2 பேதுரு 2:2ஐப் பார்க்க) என்று பவுல் ரோமாபுரியில் இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, சில யூத சகோதரர்களை கடுமையான மொழி நடையிலே குற்றம் சாட்டியுள்ளார். பழைய ஏற்பாட்டிலே, தீர்க்கதரிசிகள் தேவனுடைய பிள்ளைகளைக் குறித்து குற்றஞ்சாட்டியதாக அங்கேயும் சொல்லப்பட்டுள்ளது (ஏசாயா 52:5; எசே. 36:20-23). ஆகவே, "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதி தாகிறதினாலே மறுரூபமாகுங்கள்" என்று பவுல் நயமான கண்டிப்புடன் சொல்லுவதும், இதைப் போல்தான் உள்ளது (ரோமர் 12:2).

*பொய் சொல்லுவது குணநலனை அரிக்கிறதாயும், ஒருவரது சாட்சியை நிராகரிக்கிறதாயும் உள்ளது*. ஆபிரகாம் சாராளை அவனுடைய சகோதரி என்று சொல்லுவதற்கு, ஒரு சில தருணங்களே எடுத்துக் கொண்டாலும், அந்த பொய்யானது, அவர்கள் திட்டமிட்டபடி எங்கெங்கு பயணப்பட்டார்களோ அங்கெல்லாம் மேலும் மேலும் மறுபடியும் அதையே அவர்கள் பயன்படுத்தினார்கள் (20:13). பல வருடங்களுக்கு முன்னதாக, அவர்கள் விதைத்த ஒரு விதையைப் போல, பொய்யானது உள்ளது. அது வளர்ந்து, அவர்களது சொந்த வாழ்க்கையிலே கசப்பான கனியைத் தந்தது. ஈசாக்கும் ரெபேக்காளும் கேராரில் பெலிஸ்தர்கள் மத்தியில் பரதேசியாய் தங்கியிருந்த போது (26:6-11), ஈசாக்கு, ரெபேக்காளைப் பற்றி இதே மாதிரியான ஏமாற்று வேலையைச் செய்தது அவர்கள் இந்த விஷயத்தை ஈசாக்கிடம் பகிர்ந்திருக்க வேண்டும் என்பதற்கு சான்றாக உள்ளது. நம் காலத்தில், நாம் பூமியில் இருக்கும் போது, அது நன்மையானதாய் இருந்தாலும் அல்லது தீமையானதாய் இருந்தாலும், நமது செல்வாக்கை அவர்கள்

மீது காட்டுவதும், மற்றும் மற்றவர்கள் எல்லா செல்வாக்கையும் நம்மிடம் காட்டுவதுமாய் உள்ளது.

ஆபிரகாம் மற்றும் சாராளின் பொய்யானது கணவன், மனைவி என்ற அவர்களது உறவு முறையை பாதிப்பதால், அது விலையுயர்ந்ததாய் உள்ளது. இருந்த போதிலும், எகிப்திய ராஜாவிற்கும் மற்றும் கேராரின் ராஜாவுக்கும் முன்பு, அவர்களது சாட்சியை, இது கெடுத்துப் போட்டதுடன், அவர்களது வீட்டார் அனைவரையும் மற்றும் அவர்களது அரசருக்குரிய அதிகாரங் களையும் கெடுத்துப் போட்டது. இத்துடன், கோத்திரத் தலைவனுடைய திரளான பரிவாரம் கொண்ட மக்களில் சிலர், அவர்களுடைய எஜமான் செய்த காரியத்தைக் கேள்விப்பட்ட பொழுது, அவன் மீது வைத்திருந்த சிறிய மதிப்பையும் இழந்திருக்க வேண்டியதிருந்திருக்கும். ஆபிரகாம் மற்றும் சாராளின் ஏமாற்று குணத்தின் காரணத்தால், ஒரே மெய்த்தேவனைப்பற்றிய அவர்களது சாட்சியானது, ஓரளவிற்கு சிறிதேனும் விட்டுக் கொடுக்க வேண்டி உள்ளது. “சர்வ வல்லமையுள்ள தேவனின்” மக்கள் என்பதை (17:1), ஒரு மறுதலிக்கும் தன்மையாக இது அமைந்துள்ளது என்பதே இதன் சாராம்சம் ஆகும்.

இயேசுவுடன் கூட நடந்தும், வாழ்ந்தும் வந்த பேதுருவின் பிற்கால மறுதலிப்பும் அதன் பின்பு அவனது விசுவாசத்தையும் மற்றும் வாய்மை தவறாமையிலிருந்து விலகியதற்கான குற்றத்தை ஒத்துக் கொண்டதைப் போல (மத். 16:16; 26:33-35, 69-75), ஏறத்தாள இதுவும் அமைந்துள்ளது. உண்மையில், இதைப் போன்ற அனுபவமே எல்லா சீஷர்களுக்கும் இருந்தது. இயேசு முன்பு சொன்னது போலவே (மத். 26:31, 56), போர்ச் சேவகர்கள் இயேசுவைக் கைது செய்த போது, அவர்களது நடவடிக்கையின் மூலம் எல்லா சீஷர்களும் அவரை மறுதலித்ததுடன், அந்த இராத்திரியிலே அவரை விட்டு ஓடிப் போனார்கள். அவர்களை நீங்கள் “பூமிக்கு உப்பாயிருக்கிறீர்கள்” என்றும், மற்றும் “உலகத்திற்கு வெளிச்சமாயிருக்கிறீர்கள்” என்றும் முன்பே கர்த்தர் அவர்களுக்குப் போதித்திருந்தார் (மத். 5:13-15). இருந்த போதிலும், அவரைக் கைது பண்ணியதற்கும், அவர் உயிர்த் தெழுந்ததற்குமான இடைப்பட்ட குறுகிய காலத்திற்குள், அவர்களது உப்பானது “சாரமற்றதாயும்” (மத். 5:13) மற்றும் அவர்களது வெளிச்சமானது காணப்படாததாயும் ஆகிவிட்டது. அது அவ்வாறாக இருந்த போதிலும், அவர்கள் அவர்களது வெளிச்சத்தை “ஒரு மரக்காலால் மூடி” (மத். 5:15) வைத்து விட்டார்கள். அவர்கள் பயந்ததினால் பேசாமலிருந்து (லூக். 24:21 பார்க்க) அந்த ராத்திரியிலே அவர்கள் ஓடிப்போய்விட்டார்கள் (மத். 26:56) என்றும், மற்றும் “யூதர்களுக்குப் பயந்ததினால்” கதவுகள் பூட்டியிருக்க நடுங்கிக் கொண்டு நின்றார்கள் (யோவான் 20:19). எப்படி இருந்தாலும், இயேசுவின் மரித்தோரிலிருந்து எழுந்த புகழ் பெற்ற உயிர்த்தெழுதலும், மற்றும் சீஷர்களுக்கு அவர் காட்சியளித்தலும், அவர்களது

வாழ்க்கையை முற்றிலும் மாற்றி யதுடன், அவர்களது விசுவாசத்தை மிகவும் பெலப்படுத்தி யதுடனும், மற்றும் அவர்களுக்கு ஊக்கம் அளித்ததுடனும், மற்றும் உலகம் தரக்கூடாத சமாதானம் அல்லது அந்த சமாதானத்தை உங்களிடமிருந்து எடுத்துக் கொள்ள முடியாததற்கான நம்பிக்கைக்கு வழி வகுத்தது (யோவான் 20:19-31).

உண்மையாகவே, கர்த்தருடைய சீஷர்கள் அவருடைய அழைப்பிற்கு ஏற்ப அவரிடம் விசுவாசமாயிருப்பதற்கு எடுத்துக் கொண்ட காலத்தை விட, ஆபிரகாமிற்கு நீண்ட காலம் எடுத்துக் கொண்டது. அவன் பல தெய்வ வணக்கம் கொண்ட மெசெப்பொத்தோமியாவில் இருந்து நேரடியாக வெளியே வந்தபடியாலும், மற்றும் அவனுடைய வாழ்க்கையில் நீண்ட காலத்தை கானானியரின் அரசியல் மற்றும் மதம் சம்பந்தப்பட்ட ஒரு பயமுறுத்தும் உலகில், அவன் பிழைக்க வேண்டியிருந்ததை, நாம் நிச்சயமாக நினைவுகூர வேண்டும். விசுவாசிகளின் தகப்பனாக அவன் மாறுவதற்கு அது ஒரு வகையான சரீர சம்பந்தமான உயிர்த்தெழுதலைப் போலும், அதற்காக தொண்ணூற்றென்பது வயதான அவனது சரீரத்திலும், மற்றும் எண்பத்தி ஒன்பது வயதான சாராளின் சரீரத்திலும், வாக்குத்தத்தத்தின் குழந்தையான ஈசாக்கு பிறப்பதற்கு விரைவாக அற்புதம் நடக்க வேண்டி இருக்கிறது (ஆதி. 21ம் அதிகாரம் பார்க்க)

எனினும், ஆபிரகாமை பல வருடங்களாக விசுவாச போராட்டத்துடனும், மற்றும் அவனது போக்கானது பொய் சொல்லி ஏமாற்றும்படியாகவும் கர்த்தர் ஏன் வைத்தார்? முந்தைய கேள்விக்கு பதில் ஒன்று எப்படியும் கிடைக்காவிடினும், இயற்கையாகவே மற்றொரு கேள்வி எழும்புகிறது. கர்த்தர் ஏன் நம்முடைய விசுவாசத்தைப் போராட்டங்களாகவும் மற்றும் சில நேரங்களில் நமது பலவீனமானது, நம்மை பாவம் செய்ய இழுத்துச் செல்லும்படியாகவும் வைத்துள்ளார்? கர்த்தருடைய நோக்கமானது, ஆபிரகாமுடன் இருந்ததைப் போல, அவருடைய மக்கள் எல்லோரிடமும் இருக்கிறது என்றாலும், ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தியும், மற்றும் மக்களை பரலோக வீட்டிற்குள் செல்லும்படி செய்வதோடல்லாமல், அது குண நலன்களை வளர்க்கும்படியாகவும், நம்மை அவருடைய சாயலாக மறுரூபப்படுத்துவதுமாயிருக்கிறது (2 கொரி. 3:18). தேவன் நம்மை அவருடன், அதாவது கிறிஸ்துவுடன் ஒருவருக்கொருவர் ஐக்கியம் வைத்துக் கொள்ளவும், மற்றும் நித்தியத்திற்காக நம்மைத் தயார் பண்ண விருப்பமுடையவராய் இருக்கிறார்.

தடைபடுத்தப்பட்ட கனியை ஆதாமும், ஏவாளும் புசித்து, அவர்கள் பாவம் செய்த பிறகும், இன்னும் அவர்கள் ஏதேன் தோட்டத்தில் இருந்தாலும், சிருஷ்டிகருடன் இருந்த ஒருவருக் கொருவரான அவர்களது ஐக்கியமானது, உடனடியாக முறிந்து போகத் துவங்கியது. அவர்கள் தேவனுக்குப் பயந்தும், மற்றும் புதருக்குள் அவரிடம் இருந்து

அவர்களை மறைத்துக் கொள்ள முயற்சித்தார்கள். தேவன் ஆபிரகாமுடைய வரம்பு மீறுதலைப் பற்றி கேட்ட போது அவர் ஏவாளை குற்றம் சாட்டியதும், மற்றும் ஏவாள் பொறுப்பினை சாத்தான் மீது மாற்றினாள். இருந்த போதிலும், முதல் ஜோடியானது இன்னும் பரலோகம் போன்ற ஒரு உலகில் இருந்தால், அவர்கள் சந்தோஷம், சமாதானம் மற்றும் ஒருவருக்கொருவரும் அல்லது தேவனுடனும் பாதுகாப்பான நேசத்திற்குரிய ஐக்கியம் எதுவும் இருந்தவாறு இல்லை. பதிலாக, அவர்கள் குற்றவாளிகளாகவும், பயப்படுகிறவர்களாகவும் மற்றும் துக்கமுள்ள மக்களாகவும் மாறிவிட்டார்கள்.

பாவம் மனிதனை அவனுடைய சிருஷ்டிகரிடம் இருந்து பிரிக்கிறதாயும், மற்றும் தேவ சாயலை மனிதன் இழக்கும்படியும் செய்கிறது. தேவன் ஏன் தொடர்ச்சியாக ஒழுங்கீனமான மக்களைப் பொறுத்துக் கொண்டிருக்கிறார்? ஏனென்றால் “தேவன் அன்பாகவே இருக்கிறார்” (1 யோவான் 4:16). அவருடைய கிருபையால், இஸ்ரவேலருடைய பாவங்களை, அவர்களுடன் அவர் தாங்கிக் கொண்டுள்ளார். ஒரு பரிசுத்தமான ஜனமாக அவர்களை உருவாக்கவும் மற்றும் வனையவும், மேலும் அவரது சாயலையும் மற்றும் குணநலன்களையும், உலகத்தில் பிரதிபலிப்பவர்களாக இருக்கவும் அவர் விரும்பினார் (18:18, 19; யாத். 19:4-6). ஆகையால், கர்த்தருடைய கிருபையால், இன்றும் கிறிஸ்தவர்களுடன் அவர் பணியாற்றுகிற காரியமாய் அது இருக்கிறது. நம்முடைய பாவங்களும் மற்றும் மீறுதல்களும் இருந்த போதிலும், நாம் கிறிஸ்துவினுடையவர்களானால், “ஆபிரகாமின் சந்ததியாராயும், [அவருடைய] வாக்குத்தத்தத்தின்படியே” சுதந்தர ராயும் இருக்கிறோம் (கலா. 3:29). ஆபிரகாமிற்கு செய்தது போல, தேவன் நம்முடன் பொறுமையுள்ளவராயும், நம்மை மன்னிக்கிறவராயும் மற்றும் நம்மை ஆசீர்வதிக்கிறவருமாய் இருக்கிறார் என்பது நம்முடைய திடமான விசுவாசத்தினாலேயோ அல்லது பரிபூரண கீழ்ப்படிதினாலேயோ அல்ல, ஏனென்றால் நாம் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டதாலும், மேலும் நம்மில் கிறிஸ்துவை அவர் பார்ப்பதினாலுமே ஆகும் (2 கொரி. 5:21; கலா. 3:26, 27).

---

இறுதிக் குறிப்புகள்

[1]Eliezer D. Oren, “Gerar,” in *The Anchor Bible Dictionary*, ed. David Noel Freedman (New York: Doubleday, 1992), 2:989–91. [2]சங்கீதம் 34ல் காத் ஊரானாகிய பெலஸ்திய ராஜா “அபிமெலேக்கு” (வெளிப்படையாக ஒரு பரம்பரைப் பெயர்) என்று வெளியில் எழுதப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டினாலும், 1 சாமுவேல் 21:10-15இல் அவனை “ஆகீஸ்” (ஒரு தனிநபருக்குரிய பெயர்) என்று அழைக்கிறது. [3]2 நாளாகமத்தின் ஆசிரியர், “நேகோ சொன்ன தேவனுடைய வாயின் வார்த்தைகளுக்கு செவி கொடாததினால்” யோசியா என்ற நல்ல ராஜா மரித்ததாக 2 நாளாகமம் 35:22இல் கூறப்பட்டுள்ளது. [4]இங்கே அபிமெலேக்கு “கர்த்தர்” (אֲדֹנָי, *’Adonay*, ஆடோனாய்) என்ற வார்த்தையையும் 21:22, 23 வசனங்களிலும்

“தேவன்” (אֱלֹהִים, *’Elohim*, ஏலோகிம்) என்ற வார்த்தையையும் பயன்படுத்தியுள்ளார். இரண்டு இடங்களிலும், “கர்த்தர்” அல்லது “யேகோவா” (יהוה, *YHWH,* யாவே) என்ற தனி நபருக்கான தேவனுடைய பெயர் பயன்படுத்தினார். [5]Elaine Adler Goodfriend, “Adultery,” in *The Anchor Bible Dictionary*, 1:82. மோசேயின் கட்டளையின்படி விபச்சாரம் ஒரு மேலோங்கிய குற்றமாக இருந்தது (லேவி. 20:10; உபா. 22:22). [6]John T. Willis, *Genesis*, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1979), 275–76. [7]NIV யானது, அலகை “சேக்கல்” என்ற வார்த்தையைச் சேர்த்து தெளிவுபடுத்துகிறது. இந்தக் காலக் கட்டத்தில், ஒரு “சேக்கல்” ஆனது முத்திரை போட்ட ஒரு நாணயம் என்றில்லாமல், ஒரு எடையாக இருந்தது. [8]Louis Goldberg, “בָּגַד,” in *TWOT*, 1:89–90.